செ.வெ.எண்:60 நாள்:31.07.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம், மணவாளன்கரை கிராமத்தில் பி.ஏ.57 திருமயம் தாலுகா விவசாய விலைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம், லிட்., சார்பில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் இன்று (31.07.2016) திறந்து வைத்தார்கள்.

இந்த பகுதி நேர நியாயவிலைக்கடையினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திருமயம் அங்காடியிலிருந்து தனியாக பிரித்து மணவாளன்கரையில் புதிய பகுதிநேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிநேர நியாயவிலைக்கடையில் மணவாளன்கரை கிராமத்தை சேர்ந்த 217 குடும்ப அட்டைதாரர்களும், மகமாயிபுரம் கிராமத்தை சேர்ந்த 33 குடும்ப அட்டைதாரர்களும், செங்களாவிடுதி கிராமத்தை சேர்ந்த 41 குடும்ப அட்டைதாரர்களும் என மொத்தம் 291 குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு தேவையான பல்வேறு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் தரமாக பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் பொதுமக்களின் நேரம், வீண்அலைச்சல் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து பொதுமக்களும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்த பகுதி நேர நியாயவிலைக்கடையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திருமயம் அங்காடியில் இருந்த 1173 குடும்ப அட்டைதாரர்களில் 291 குடும்ப அட்டைதாரர்களை தனியாக பிரித்து மணவாளன்கரையில் புதிய பகுதிநேர நியாயவிலைக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி நேர நியாயவிலைக்கடை புதன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்படும். இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, பாமாயில், மண்ணெண்ணெய், சர்க்கரை, உப்பு போன்ற பல்வேறு உணவுப்பொருட்களை குறைந்த விலையில் பெற்று பயனடையலாம். இப்பகுதி பொதுமக்கள் இனிமேல் திருமயத்திற்கு சென்று பொருட்கள் வாங்குவது தவிர்க்கப்பட்டதுடன் நேரம் மிச்சம், அலைச்சல் தவிர்ப்பு போன்ற பல்வேறு நன்மைகள் ஏற்படும். எனவே அனைத்து பொதுமக்களும் தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்டங்களை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், பொது விநியோகத்திட்டத்தின் துணைப்பதிவாளர் திரு.சு.சதீஷ்குமார், திருமயம் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.எம்.பி.முத்துச்சாமி, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.ஏ.எல்.ராமு, வட்டாட்சியர் திருமதி.ஆரமுததேவசேனா, ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.சரசுமாரிமுத்து, கூட்டுறவு சங்கத்தலைவர்கள் திரு.எஸ்.பாண்டியன், திரு.எல்.எஸ்.இராமச்சந்திரன், திரு.ஏ.இளவரசன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**